# சம்ஸ்கிருத நாடகங்களும் மூல நூல்களும்

## தசரூபகத்தை அடிப்படையாகக் கொண்ட சமகாலப் பார்வை – ஓர் ஆய்வு

**திரு.ச.பத்மநாபன்**

**B.A.(Hons), P.G.Dip.in Edu., M.Phil.**

**விரிவுரையாளர், சம்ஸ்கிருதத்துறை,**

**யாழ்ப்பாணப்பல்லைக்கழகம், யாழ்ப்பாணம்.**

**padamanaban73@gmail.com**

## ஆய்வுச் சுருக்கம்

சம்ஸ்கிருத இலக்கிய மரபில் நாடகங்கள் திருஷ்ய காவியங்கள் எனப்படுகின்றன. இந் நாடகங்களுக்கு இலக்கண நூல்களாக நாட்டிய சாஸ்திரமும், தசரூபகமும் விளக்குகின்றன. சம்ஸ்கிருத நாடகத்தின் கரு, பாத்திரம், சுவை எனும் அம்சங்களுடன் நாடகத்தின் வகைகள் மற்றும் மேடை, பாத்திரங்களின் குணம்சங்கள், பேச்சு மொழி அவைக்குரிய பாடல் யாப்புக்கள், மேடையமைப்பு, பாத்திர ஒப்பனை, கதையின் வளர்ச்சி எனும் இன்னோரன்ன விடயங்கள் தொடர்புபெறுகின்றன. அந்நிலையில் சம்ஸ்கிருத காவியவியல் நூல்வரிசையில் நாடக இலக்கியத்திற்கான இலக்கண நூலாக தனஞ்ஜயனின் தசரூபகம் விளங்குகின்றது. இந்நூலின் ஊடாக நாடகமுறைமைகளும், நாடக எழுச்சிகளும் சமகாலத்தில் மேடை நாடகங்கள் எனும் தன்மை அருகி திரை நாடகங்களாக விளங்குகின்றன. எனினும், நாடக இலக்கண இயல்புகளுக்கு ஏற்ற திறனுடன் கவர்ச்சிகரமானதும் ஜனரஞ்சாமானதுமான தன்மைக்கு தசரூபகத்தின் வகிபங்கு முக்கியத்துவமுடையதாகும்.

**திறவுச்சொல்** : நாடகம், ரூபகம், நாட்யம், வஸ்து, நேதா, ரசம், காவியவியல்

## அறிமுகம்:

சம்ஸ்கிருத நாடகங்கள் ஓர் வகை இலக்கியங்கள் ஆகும். இவை திருஷ்ய காவ்யங்கள் என வகைப்படுத்தப்படுகின்றன. நாடகத்திற்கான இலக்கண நூல்களாகக் கொள்ளப்படுவனற்றுள் பரதரின் நாட்டிய சாஸ்திரமும் தனஞ்ஜயனின் தசரூபகமும் முதன்மைபெறுகின்றன. நாடகம் என்பது மன வெழுச்சியின் பால் சமூகப்பண்பாட்டுக் கோலங்களை போலச் செய்தல் என்றாகின்றது. அத்தகைய செயற்பாட்டில், அவை தெய்வீகம், சமூகம் என்பனவற்றுடன் தொடர்புடையனவாகின்றன. அந்நிலையில் சமுதாய எழுச்சிக்கான செயற்பாடுகளுள் மொழி, காலம், பாத்திரங்கள், மேடை எனப்படும் விடங்களுக்கு மேலாக கதையின் கருப்பொருள் என்பன முக்கியத்துவம் பெறுகின்றன. அந்நிலையில் நாடகங்கள் சிறப்பாக சம்ஸ்கிருத்மொழியில் இன்பியல் சார்ந்தனவாகவே காணப்படுகின்றன. அவ்வகையில் கதையின் கரு, நடிகர், சுவை எனும் மூன்றும் முக்கியத்துவப்படுத்தப்படுகின்றன.

இவைகளுக்கு மேலாக இம் மூன்று விடயங்களும் உயர்ந்த தன்மை பெறுவதற்கு கருவின் மெருகூட்டிய தன்மை, சந்தர்ப்பங்களுக்கு ஏற்ற கவர்ச்சிகரமான பாத்திரங்கள், சந்தர்ப்பங்களுக்க ஏற்புடைய சுவை என்பனவும் அவற்றிற்கு ஏற்ற மேடை அமைப்புக்களும் ஏனைய விடயங்களும் அவசியமாகின்றன. அத்தகைய தன்மையில் நடித்துக்காட்டும் தன்மையை வற்புறுத்தும் நாடக இலகியத்திற்கு இலக்கணமாகிய தசரூபகத்தை அடியொற்றி நோக்குவோம்.

### தசரூபகம்

சமஸ்கிருத நாடக இலக்கண நூல் தசரூபகம் ஆகும். இந்நூலின் ஆசிரியர் தனஞ்ஜயன் ஆவார். இவர் முஞ்சராஜனது அவைக்களப்புலவருள் ஒருவராவார். நாடகத்தின் முதன் நூலாகச் சுட்டப்படுவது பரதரது நாட்டிய சாஸ்திரம் ஆகும். நாட்டிய சாஸ்திரத்தில் கூறிய பழைமையான நாடகமரபுகளைத் தெளிவுபடுத்தும் நூலாக தசரூபகம் விளங்குகின்றது. தசரூபகம் நாட்டியம் என்பது நடிப்பினூடாக நிகழ்ச்சிகளை உணர்த்துவது என்றும் அதனால் உருவம் (ரூபம்) என்றும் பிறருக்கு நடித்துக் காட்டுதல் காரணமாக இது உருக்கோடல் (ரூபகம்) என்றும் அழைக்கப்படுகின்றது. இதன் காரணமாக இந்நூல் தசரூபம் என்றும் அழைக்கப்படும். இதில் ரசம் எனும் சுவையை அடிப்படையாகக் கொண்டு பத்து வகையாக நாட்டியம் வகைப்படுத்தப்படுகின்றது.

நாடகம், பிரகரணம், பாணம், பிரகசனம், டிமம், வியாயோகம், சமவகாரம், வீதி, அங்கம், ஈசாமிருகம் என்பனவாகும். (த.ரூ.I.7)

இப்பத்தினையும் கூறும் நூலாக தசரூபகம் விரிந்து செல்லும் தன்மையாகிறது. அவற்றைத் தொகுத்து நோக்குவோம்.

தசரூபம் நான்கு பிரகாசம் எனும் பிரிவுகளையுள்ளடக்கியது. 1ம் பிரகாசம் 68 சுலோகங்களையும், 2ம் பிரகாசம் 72 சுலோகங்களையும், 3ம் பிரகாசம் 76 சுலோகங்களையும், 4ம் பிரகாசம் 86 சுலோகங்களையுமாக 302 சுலோகங்கள் இடம்பெறுகின்றன. இந்நூலுக்கு சுதர்சனாசாரிய சாஸ்திரிகளால் ‘பிரபா’ எனும் உரை எழுதப்பட்டுள்ளது.

முதலாவது பிரகாசத்தில் நாட்டியத்தின் வகையீடுகள் அவற்றின் லக்ஷ்ணங்கள் கூறப்படுகின்றன. அவ்வகையில் நாடகத்தின் வஸ்து (பொருள்), நேதா (தலைவர்), ரசம்(சுவை) (த.ரூ. I .11) என்பன பற்றி மூன்றாகப் பகுத்து நோக்கப்படுகின்றன. இப்பொருள் பற்றிய பிரிவுகள், வஸ்து என்பதன் அதிகாரி, பிரசங்கிகை எனும் பிரிவுகள், பிரசங்கிகை பதாகா, ப்ரகரீ என விரிவுபடுதல், பதாகையின் இலக்கணம், நாடகத்தின் மூவகை மூலங்கள் ப்ரக்யாதம், உற்பத்தி, மிஸ்ரம் எனும் பாகுபாடு (த.ரூ.I.15), நாடகப்பயன் (த.ரூ.I.16), நாடகத்தின் பொருள் மூலங்கள் ஐந்துவகை என்றும், அவை பீஜம், பிந்து, பதாகை, ப்ரகரீ, கார்யம் என வகைப்படுத்தப்படும் எனவும் தெளிவுபடுத்தப்படுகின்றது. நாட்டிய நிகழ்ச்சி அவஸ்தை என அழைக்கப்படும். இது ஆரம்பம், ப்ரயத்னம், ப்ராப்தி, நியதாப்தி, பலாகமம்

என்பனவாகும். (த.ரூ.I.18-20) இந்நிலையில் இவ்வைந்து நிகழ்ச்சிகளுக்கும் ஏற்ப ஐவகை சந்திகள் உருப்பெறும். அவை முகம், ப்ரதிமுகம், கர்பம், அவமர்சம், உபசம்ஹ்ருதி என்பனவாகும்.

இவ்வாறாக இதனது விரிவுகளை சிறப்பாக லக்ஷணங்களாகவே கூறும் தன்மையுடையதாக விளங்குகின்றது.

இரண்டாவது பிரகாசத்தில் நால்வகைத் தலைவன் அவனது நண்பர், தலைவனின் எண் வகைகள் குணங்கள் (த.ரூ.II. 9 - 13) என்பனவும், மூவகைத் தலைவியர் (த.ரூ.II.14 - 21) எண் வகைத் தலைவியர் (த.ரூ.II.22 - 26) தலைவிக்கு ஏற்ற பாத்திரங்கள் (த.ரூ.ii.27) தலைவனுக்கு ஏற்ற பாத்திரங்கள் (த.ரூ.ii.41) மற்றும் அதன் அம்சங்கள் பிரிவுகள் என்பன கூறப்படுகின்றன. நாடக மொழிபற்றி (த.ரூ.II.59 - 66) யும் பாத்திரங்களின் மொழித்தன்மை பற்றியும் கூறப்படுகின்றது. இவை விரித்து நோக்கின் பரந்த விளக்கமுடையது.

மூன்றாம் பரிச்சேதம் நாடகம் எவ்வாறு அமையும் என்பதனை மிகத் தெளிவாகக் கூறும் பகுதியாகும். இதில் நாட்டியத்தின் அமைவுடன் பத்துவகை நாடகங்களும் விரிவாகச் சுட்டப்படுகின்றன. உதாரணமாக 'ப்ரகசனம் எனும் வகையில் பாசண்டர், விப்ரர், சேடன், சேடி என்போர் பொருத்தமான வேஷத்துடன் பாஷையும் தோன்ற நகையை விளைக்கும், நகைக்குறிப்பு மொழிகளைக் கூறி நடிப்பர்.' (த.ரூ.II.49-50) என்றவாறாக அமைந்து காணப்படுகின்றது.

நான்காம் பரிச்சேதம் ரசம், குறிப்பு, சமத்துவம், அபிநயம் எனும் நான்கு உறுப்புக்களை உணர்த்துவதாகின்றது. (த.ரூ.IV.1) பிரதானமாக ரசம் என்பது பற்றிப் பேசப்படுகின்றது. இதனது முப்பத்தாறு வகையும் விரிவுபடக் கூறப்படுகின்றது. இது பிகுந்த நுட்பமான விடயப்பரப்புக்களை உள்ளடக்கியதாக உள்ளது.

நாட்டியத்தை நடித்துக் காட்டும் கடைப்பாட்டை இறுதிப்பாடலில் கூறுகின்றார்.

'உவகைப் பொருளோ, இளிவரற்பொருளோ உயர்ந்த பொருளோ, தாழ்ந்த பொருளோ, வன்கண்ணதோ, அருட்பாலதோ, பழங்கதையோ, கற்பனைக்கதையோ, எதையும் மானுடர்க்கு சுவை பயக்கும்படி நாட்டியக் கட்டுரையினுள் அமைத்துக் கூறுதல் கூடும்'

(த.ரூ.IV.79)

எனக் கூறி இறுதியான பாடலில் தனஞ்சயன் தாம் இயற்றியதே இந்நூல் என தெளிவுபடுத்துகின்றது.

இவ்வாறாக நாடகவியல் சார்ந்த விடயம் சில விடத்து நாட்டிய சாஸ்திரத்திலும் சாஹித்திய தர்ப்பணத்திலும் கூறப்பட்டாலும் நாடகத்திற்கான பொருத்தப்பாட்டுடன் தசரூபகத்தில் விளங்கப்படுத்தப்பட்டுள்ளது.

## சம்ஸ்கிருத நாடக அமைப்பு

சம்ஸ்கிருத நாடகங்கள் ஒன்று முதல் பத்து வரையான அங்கங்கள் எனும் பகுதிகளைக் கொண்டு விளங்கும். கடவுள் வாழ்த்து என்பது நாந்தி என அழைக்கப்படும். அதனுடன் ஆரம்பித்து வாழ்ந்து எனும் பரதவாக்கியத்துடன் முடிவுறும்.

பிரஸ்தாவனா எனும் பகுதி சூத்திரதாரனால் நாடகத்தையும், நாடக ஆசிரியரையும், நடிகர்களையும் அறிமுகம் செய்வதாக அமையும். பிரஸ்தாவனையின் முற்பகுதி பூர்வரங்கம் எனப்படும். இது நாடக மேடை வழிபாடு என்றும் அழைக்கப்படும். இது நாடக ரசிகர்களையும், நடிகர்களையும் வாழ்த்துவதாக அமையும். இதனையே நாந்தி என்பர். இந்நிலையில் சூத்திரதாரனது அறிமுகத்தில் நாடகக் கதைத் தலைவனது அறிமுகம் கவர்ச்சிகரமாக அமைய நாடகம் காட்சிகளாகவும் அங்கங்களாகவும் விரிவு பெறும்.

நாடக பாத்திரங்கள் தனித்துவம் பெறுவனவாகும். அப்பாத்திரங்களுள் விதூஷகன், சூத்ரதாரன் ஆகிய இருவரும் முக்கியத்துவமுடையவர்களாகும்.

ஒரு பாத்திரம் முதல் பல பாத்திரங்கள் வரையாக நாடகங்கள் உண்டு. இதில் கதாநாயகன் மற்றும் உயர் பாத்திரங்கள் சம்ஸ்கிருத மொழியில் பேச ஏனைய பாத்திரங்கள் மக்களின் இயல்பு மொழியாகிய பிராகிருத மொழியைப் பேசுவர்.

சம்ஸ்கிருத நாடகம் இன்பியல் சார்ந்த நாடகமாகும். நாடகங்கள் புருஷார்த்தங்களான அறம், பொருள், இன்பம், வீடு என்பனவற்றை உணர்த்துவனவாகவே அமைகின்றன.

நாடகத்தின் மொழி வசனமும் செய்யுளும் கலந்ததாக அமையும். சுவையை உணர்த்துவதற்கு ஏற்ற பாடல்களின் யாப்புக்கள் சுட்டப்படுகின்றன. உதாரணமாக சிருங்கார ரசத்திற்கு மாலினீமந்தாக்ராந்த யாப்பும், வீர, ரௌத்ர ரசங்களுக்கு ஆர்யா யாப்பும் குறிப்பிடத்தக்கன. கடின மற்றதும் சுவையை வெளிப்படுத்தும் நடையும் குணாம்சங்களுக்கு ஏற்ற பாத்திரங்களின் பெயர்களும் பொருத்தமுடையதாக அமைந்து காணப்படும்.

நாடக மேடைகள் தனித்துவமாக விளங்கப்படுகின்றன. நாடகத்தில் சமூக வழுக்காறுகள் லோகதர்மீ என்றும் மெருகூட்டிய வழுக்காறுகள் நாட்டிய தர்மீ என்றும் அழைக்கப்படுகின்றன. அவ்வாறே நாடகத்திற்கான பொருத்தமான நேரங்களும் சுட்டப்படுகின்றன.

**நாடக வகை**

| | பிரிவு | அமைப்பு | உதாரணம் |
|---|---|---|---|
| 1 | நாடகம் | உயர் நிலைப்பாத்திரம் | 1. அபிக்ஞான சாகுந்தலம்<br>2. ஸ்வப்னவாசவதத்தா |
| 2 | பிரகரணம் | | 1. ம்ருச்சகடிகம்<br>2. மாலதீமாதவம் |
| 3 | சமவகார | மூன்றங்க நாடகம் | |
| 4 | இஹாம்ருக | நான்கு அங்கங்கள் உடைய நாடகம் | |
| 5 | டிமம் | உயர்நிலை நாடகம் நான்கு அங்கங்கள் ஹாஸ்யம், சிருங்காரம் தவிர்ந்த ஏனைய ரசங்கள் இடம்பெறும். வஞ்சகம், போர் இடம்பெறும். | |
| 6 | வியாயோக | புகழ்படைத்த ஒருகதாநாயகனை மட்டும் கொண்டது. ஓர் அங்க நாடகம் போர், சவால் இடம்பெறும். | மத்யம வியாயோகம் |
| 7 | உத்சிருஷ்டிசாங்கம் | ஓர்அங்க நாடகம் கருணை ரசம் (ஓர் அங்க துன்பியல் நாடகம்) | ஊருபங்கம் |
| 8 | பிரஹசனம்ஹ | ஓர் அங்க நாடகம் ஹாஸ்யம் முக்கியத்துவம் பெறும் | மத்தவிலாச பிரகசனம் |
| 9 | பாணம் | ஓர் அங்க நாடகம் ஒரு பாத்திரம் இடம்பெறும் | |
| 10 | வீதி | ஓரிரு பாத்திரங்கள் | |

இவ்வாறு நாடகவகைகள் பத்தும் அமைய உப ரூபகங்களுள் நாடிகா எனும் வகையில் ரத்னாவளியும், த்ரோடம் எனும் வகையில் விக்ரமோர்வசியமும் குறிப்பிடத்தக்கன.

## பயன்

முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்தர் நாடகத் தமிழ் பற்றிய இலக்கண நூலினைப் படைப்பதற்கான முயற்சிக்குரிய பயனே 'மதங்க சூளாமணி' ஆகும். இந்நூல் தசரூபத்தையும் சேக்ஸ் பியரையும் ஒப்பீடு செய்து தமிழ் உலகிற்கான ஓர் நாடக நூலை வெளிப்படுத்தினர். அந்நூல் மிக விரிவு பட வேண்டியதன்மையதாக உள்ளது. எனினும் இன்று மேடை நாடகம் அற்றநிலையில் நாடகங்கள் சிறந்த தரத்துடன் கட்டமைக்கப்பட்டமைக்கும் பாத்திரங்களின் ஒப்பனை தோற்றம், மொழிப்பயன்பாடு, காலம் என்பனவற்றின் பொருத்தப்பாட்டிற்கு ஏற்ப தொலைக்காட்சி நாடகங்கள் தொடராக நாடகம் உணர்த்தும் பாத்திரங்களினூடான குணாதிசயங்களை எமக்கு உணர்த்துகின்றன.

## நிறைவுறை

சமஸ்கிருத நாடக, மூலகங்களுள் தசரூபகம் தலையாயது. நாடகம் என்பது சமகால சமுதாய நோக்குக்கு புதிய வடிவம் கொடுக்கப்பட்ட தன்மையில் தொலைக்காட்சி தொடர் நாடகங்களாக அமைகின்றன. அவற்றுள் நாடக மூலங்களாக அமையும் இராமாயாணம் மஹாபாரதம் என்பனவற்றின் தொடர் கதைப் பாணியிலிருந்து நாடகப்பாங்காக உரிய உயரிய குணங்களுடன் மக்களின் கவர்ச்சிகரமான தன்மைகளுக்கு ஏற்ப நாடகவியல் அம்சங்களையும் மானிடர்களுக்கு சுவை பயக்கும் படியாக அமைத்துக் கூறுவதாகவும் அமைந்து நாடகத்திற்கான மூல நூல் எனும் வகையில் தசரூபத்தின் பயன்பாட்டு வடிவமைப்பைக் காட்டி நிற்கின்றன.

இதனூடாக நாடகங்கள் இப்படித்தான் அமைய வேண்டும் எனும் ஓர் உணர்வுபூர்வமானதோர் விழிப்புணர்ச்சியை படம்பிடித்துக் காட்டுவதாக அமைகின்றது.


## உசாத்துணை நூல்கள்

### வடமொழி மூலங்கள்

1. **நாட்டிய சாஸ்திரம்** (1894), பரதமுனி, நிர்ணயசாகர பிரஸ், மும்பாய்.
2. **தசரூபகம்** (1961) தனஞ்சயன், 'ப்ரபா' எனும் உரையுடன் சுதர்சனாசார்ய சாஸ்திரி (பதி). காசி.
3. **சாஹித்ய தர்ப்பணம்** (1933) விஸ்வநாதர் பகுதி I – X வரை Dr.P,V.Kane (ed.) Bombay

## ஏனையவை

1. ஸ்ரீநிவாச ஸர்மா (1989) **வடமொழி நாடக இலக்கிய வரலாறு**, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர்.
2. விபுலாநந்த அடிகள் (1926) **மதங்க சூளாமணி** செந்தமிழ்ப் பிரசுரம், மதுரை